4. கவன ஈர்ப்பு.

கோடுவள்ளி கிராமத்தில் நவீன இறைச்சிக் கூடம் நிறுவ ஆயத்தம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு, திரு. திருச்சி ஆர். சௌந்திர ராஜன் ''திருவள்ளூருக்கு அருகில் மிகப் பெரிய மாடு வெட்டும் தொழிற்சாலை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பெற்று வருவதால் மக்களிடையே நிலவும் கவலை குறித்து'' மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும். அவர் தற்போது இருக்கையில் இல்லை.

திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை அறிக்கையினை வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினரின் வேண்டுகோளுக்கு இணங்க அறிக்கை வைக்கப் பெறலாம்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

இறைச்சி உண்போருக்கு சுத்தமானதும், தரமானதுமான இறைச்சி கிடைக்கச் செய்யும் பொருட்டும், இறைச்சிக் கூடத்தில் அதிக அளவில் கிடைக்கக்கூடிய பலவித உப பொருள்களை வீணாகாமல் தடுத்து பயனுள்ள வகையிலும் லாபகரமாக பயன் படுத்துவதற்கும், அதிக அளவில் வேலை வாய்ப்புக்களை உண்டாக்குவதற்கும் ஒரு நவீன இறைச்சிக் கூடம் ஏற்படுத்துவது அத்யாவசியமாகிறது. சராசரி, தினசரி 2500 முதல் 3000 ஆடுகளும், 150 முதல் 200 மாடுகளும் 20 முதல் 30 பன்றிகளும் மாமிச உணவிற்காக உபயோகப்படுத்தப்படும். 40 லட்சத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகை உள்ள சென்னை மாநகரத்திற்கு ஓர் நவீன இறைச்சிக்கூடத்தை தோற்றுவிக்க அரசு ஆணை பெற்று தமிழ் நாடு இறைச்சி நிறுவனம் செங்கல்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர் தாலுகாவில் கோடுவள்ளி கிராமத்தில் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள 82 ஏக்கர் நிலப்பரப்பில் 3.75 கோடி ரூபாய் செலவில் நவீன இறைச்சிக்கூடம் கட்டும் ஆயத்தப்பணிகளை மேற்கொண்டு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வருகிறது. நவீன இறைச்சிக்கூடத்தினால் கீழ்க்கண்ட நன்மைகளும் பலன்களும் ஏற்படும்.—

1. விவசாய பெருமக்கள் வளர்க்கும் ஆடு, மாடுகள், பன்றிகள் சிறந்த முறையிலும் நல்ல பலனுடனும் விற்பனை செய்ய நவீன இறைச்சிக்கூடத்தில் நிறுவப்பட இருக்கும் கால்நடை சந்தைகள், சிறந்த வசதிகளை அளிக்கும்.

2. உணவிற்காக உபயோகப்படுத்தப்படும் கால் நடைகள் தகுதிபெற்ற கால்நடை மருத்துவர்களால் சிறந்த முறையில்பரிசோதிக்கப்பட்டு பின்னர் மக்களின் உபயோகத்திற்கு அனுமதிக்க சிறந்த வசதிகள் ஏற்படுத்தப்படும்.

3. ஆடு, மாடு, பன்றிகள் மாமிசத்திற்காக தயாரிக்கப்படும் பொழுது யாதொரு அசுத்தமும் தரக்குறைவும் ஏற்படாவண்ணமும் மாமிசம் விரைவில் கெடாவண்ணமும் இருக்க தேவையான வசதிகள் நவீன இறைச்சி கூடத்தில் நிறுவப்படும்.

4. தற்பொழுது பெரம்பூரில் சுமார் 11 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கிவரும் இறைச்சிக் கூடத்தை நவீன முறையில் மாற்றி அமைக்க இயலாத காரணத்தால் இந்தகூடத்தினை கோடுவள்ளிக்கு மாற்றுகிறோம். தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தில் நல்ல தண்ணீர் வசதியும் உள்ளது.

5. நவீன இறைச்சிக்கூடத்தில் அதிக அளவில் கிடைக்கக் கூடிய உப பொருட்களான (by products) இரத்தம், எலும்பு, கொம்புகள், குளம்புகள், கொழுப்பு, முடி, தோல் முதலியன பலவிதமான தொழிற் துறைகளுக்கு பயன்படுத்துவதோடு இரத்தத்தூள், எலும்புத்தூள், முதலியவை கால்நடைகளின் தீவனத்திற்கும் கோழித்தீவனத்திற்கும் பெரிதும் பயன்படுத்தப் படும்.

6. நவீன இறைச்சிக்கூடத்தில் வெட்டப்படும் கால்நடைகளிலிருந்து கிடைக்கக்கூடிய சுரப்பிகள் (glands) மருத்துவ உபயோகத்திற்குப் பெரிதும் பயன்படுத்தப்படும்.

நவீன இறைச்சிக்கூடத்தில் கிடைக்கக்கூடிய உப பொருட்களை மேற்கூறியவண்ணம் பயன்படுத்தும் பொழுது தமிழகத்தில் தொழில் அபிவிருத்தியும் ஆயிரக்கணக்கான படித்த மற்றும் படிக்காத மக்களுக்கு (educated and uneducated) வேலை வாய்ப்புக்களும் பெருக சிறந்த வாய்ப்புக்கள் உள்ளன. அதோடுஅல்லாமல் தற்பொழுது மகாராஷ்டிரம், கேரளம், உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் வெளிநாடுகளுக்கு இறைச்சி ஏற்றுமதி செய்து நல்லபலன்களை அடைகின்றன. கோடுவள்ளியில் நிறுவப்பட இருக்கும் நவீன இறைச்சிக்கூடம் தமிழகத்திலும் இறைச்சி ஏற்றுமதியை பெரிதும் ஊக்குவிக்கும். இறைச்சி ஏற்றுமதிக்கு முக்கியத் தேவை சுகாதாரத்துடனும், வசதிகளுடனும் செயல்படக்கூடிய நவீன இறைச்சிக்கூடமாகும்.

TRUTH ALONE TRIUMPHS

தற்போது கோடுவள்ளியில் நிறுவப்பட்டுவரும் நவீன இறைச்சி கூடம் பம்பாய் மாநகரில் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டு வரும் தேவனார் (D.onar) நவீன இறைச்சிக்கூடத்தை முன் மாதிரியாக கொண்டதாகும்.

இந்நவீன இறைச்சிக்கூடம் நிறுவப்படுவதால் தற்பொழுது சென்னை மாநகரில் இயங்கிவரும் இறைச்சிக் கூடங்களில் பணி புரியும் தொழிலாளிகள் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப் படுவர்.

எனவே இந்நவீன இறைச்சிக்கூடம் நிறுவப்படுவதால் தற்போது இறைச்சி வெட்டும் தொழிலில் ஈடுபட்டுவரும் பணியா ளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் எவ்வித பாதிப்பும் இன்றி பெருமளவில் நன்மையே ஏற்படும்.

5. அரசினர் சட்ட முன்வடிவு.

கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1980—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, தமிழ் நாடு 1980-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டமுன்முடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் முடிவு எண் 45/1980) (ஆய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு), ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் என்று முன் மொழிந்த தீர்மானத்தின் மீது மேலும் விவாதம். திரு. இரா. கருப்பையா ஏற்கனவே 40 நிமிடங் கள் பேசியுள்ளார். ஆகவே இன்று 5 நிமிடங்களே முடித்துக் கொள்ளவேண்டும்.

*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே எனக்கு 5 நிமிடங்கள் போதாது, மேலும் நேரம் வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் கூறியுள்ளேன்.

நேற்றைய முன் தினம் இந்தக் கூட்டுறவுச் சட்டத்தின்படி சங்கங்கள் செயல்படக்கூடிய முறைகள், ஜனநாயக அமைப்புகள் எப்படி செயல்படுகின்றன, அதிலே இருக்கிற குறைபாடுகள் என்ன என்பதைப்பற்றி நான் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறேன்.

அடுத்து, நான் குறிப்பிட விரும்புவது, சட்டத்திலே என்ன கூறப்பட்டிருக்கிறது? இந்த சட்டத்திலே உள்ள பல ஷரத் துக்களிலே, பதிவாளர் அவர்களுக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. சங்கம் என்ன முடிவு செய்தாலும், பதிவாளருடைய முடிவே இறுதியானது என்கிற வகையிலே, அது நிலைநாட்டக்கூடிய வகையிலே இன்றையதினம் சட்டத்திலே ஷரத்துக்கள் இருக்கின்றன. அதை விவரமாகக் கூறுவதற்கான நேரம் இல்லை. பதிவாளருக்கு, ஒரு வீட்டோ பவர், ரத்து